பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3·50

சுடர் 5 பிரமோதூத ஹூ புரட்டாதி மீ 09 உ. செவ்வாய்க்கிழமை (25-09-1990) ஹிஜ்ரி 1410 ற. அவ்வல் 05 கதிர்: 205

# கொழும்பு சென்ற பயணிகள் வவுனியா அகதிகள் முகாமில்!

## படையினரால் தடுத்து வைப்பு

யாழ்ப்பாணம், செப். 25

கடந்த ஐந்து நாட்களாக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பயணிகள் இராணுவத்தினரால் வழிமறிக்கப்பட்டு, வவுனியாவில் உள்ள அகதி முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் மூலம் இத்தகவல் தெரியவந்திருக்கிறது.

பயணிகள் தடுத்துவைக்கப் பட்டிருக்கும் முகாம் பகுதியைச் சூழ படையினரின் பலத்த பாதுகாப்பு போடப் பட்டிருப்பதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வாறு தடுத்து வைக்கப் பட்டிருக்கும் மக்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பது தெரியவில்லை. [உ]

## முத்திரைச் சந்தியில் நேற்று குண்டுவீச்சு! ஒருவர் பலி!!

யாழ்ப்பாணம், செப். 25

நேற்று நண்பகல் 1.30 மணி அளவில் நல்லூர் முத்திரைச் சந்திப் பகுதியில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றின் மீது திடீரென நடத்தப்பட்ட விமானக் குண்டு வீச்சில் அந்த நிறுவனம் முற்றாகத் தரைமட்டமானது. அப்பகுதியில் இருந்த பொதுமகன் ஒருவர் உயிரிழந்தார். இருவர் சிறு காயமுற்றனர்.

பூநகரியைச் சேர்ந்தவர் எனக் கருதப்படும் கந்தன் கருணாநிதி [வயது 34] என்பவரே உயிரிழந்தவராவார்.

முத்திரைச் சந்தியில் பொது மக்கள் கூடியிருந்த வேளையில் கண்முடித்தனமான இக்குண்டு வீச்சுத் தாக்குதல் இடம்பெற்றது.

அங்கு கூடிநின்ற பொது மக்களில் பெரும்பாலானோர் அப்பகுதியிலிருந்த பதுங்கு குழிகளுக்குள் தஞ்சம் புகுந்திருந்தனர். இதனால் பெரும் இழப்புகள் தவிர்க்கப்பட்டன. [உ-5-6]

## அரியாலையில் 4 பேர் காயம்

யாழ்ப்பாணம், செப். 25

நேற்று நண்பகல் 1.30 மணி அளவில் அரியாலை நொத்தாரிஸ் வீதியில் குடியிருப்புப் பகுதி மீது நடத்தப்பட்ட பொம்மர் குண்டு வீச்சில் ஒரு வீடு முற்றாகச் சேதமுற்றது. மேலும் மூன்று வீடுகள் சேதமுற்றன. அப்பகுதியில் இருந்த நான்கு பொதுமக்கள் காயமுற்றனர்.

கோ. சரஸ்வதி (வயது-60) க. தங்கரத்தினம் (வயது-38), எஸ். செல்வராணி (வயது 19) ஆகிய மூன்று பெண்களும், எஸ். இளையராஜா (வயது-10) என்ற சிறுவனும் காயமுற்றனர்.

குண்டு வீச்சு இடம்பெற்ற சமயம் அப்பகுதியிலிருந்த மக்கள் பதுங்கு குழிகளுக்குள் தஞ்சம் புகுந்திருந்ததால் இழப்புக்கள் பெரிதும் தவிர்க்கப்பட்டன. (உ-6)

## ‘சாந்திகம்’ உளவள நிலையம் குண்டு வீச்சால் தரைமட்டம்

யாழ்ப்பாணம், செப் 25

யாழ். வேம்படிச் சந்தியில் இயங்கி வந்த ''சாந்திகம்'' உளவள நிலையம் வான்த் தாக்குதலால் தரைமட்டம் ஆனது

ஸ்ரீலங்கா, இந்திய இராணுவ நடவடிக்கைகளின் போது உளரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களை சகஜவாழ்க்கைக்கு திரும்பச் செய்யும் பணியை ''சாந்திகம்'' உளவள நிலையம் மேற்கொண்டு வந்தது.

இந்த அலுவலகக் கட்டடம் முழுமையாகத் தரைமட்டமாகியுள்ளதாக அந்த அமைப்பின் பிரதிநிதிகள் நேற்று அங்கு சென்று பார்த்தபின் தெரிவித்தனர். [இ-3]

## ஊர்காவலர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப். 25

திருகோணமலை புநுக்கவே என்ற இடத்தில் கடந்த சனியன்று சிங்கள ஊர்காவல் படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 3 ஊர்காவலர்கள் உயிரிழந்தனர், இரண்டு ஷொட் ''கன்'' களும், 8 தோட்டாக்களும் மீட்கப்பட்டன.

— விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன, [உ]

## செங்கலடியில் படையினர் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், செப். 25

நேற்று கொம்மாந்துறையிலிருந்து ஏறாவூர் நோக்கிச் சென்ற இராணுவத்தினரை செங்கலடியில் வைத்து விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்குதல் நடத்தினர்.

தாக்குதலை அடுத்து படையினர் கொம்மாந்துறை முகாமுக்குப் பின்வாங்கிச் சென்றதாக விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## மன்னாரிலும் தாக்குதல்

யாழ்ப்பாணம், செப், 25

மன்னார், இலுப்பைக்கடவையில் கடந்த புதனன்று குடியிருப்புப் பகுதிகளை நோக்கி பொம்மர் தாக்குதல்கள் இடம்பெற்றன. எனினும் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. (உ-6)

## கச்சேரியிலும் வீடுகள் சேதம்

யாழ்ப்பாணம், செப். 25

நேற்று நண்பகல் யாழ் நகரப்பகுதியில் இடம்பெற்ற பொம்மர் தாக்குதலினால் கச்சேரிக்கு அண்மையில்கண்டி [illegible] சேதமடைந்தன (உ-5-6)

## பீப்பாய்க் குண்டினால் ஆறு வீடுகள் தகர்ந்தன!

### யாழ் பிரதான வீதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், செப். 25

யாழ் பிரதான வீதி—தண்ணீர்த்தாங்கிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற பீப்பாய்க் குண்டு வீச்சினால் ஆறு வீடுகள் தரைமட்டமாகின.

நேற்று மாலை சுமார் 4.30 மணியளவில் கோட்டைப் பகுதியில் பொதிகளைப் போட்ட ''அவ்ரோ'' இடையிடையே குண்டுகளையும் வீசியது.

அது நகரை விட்டுச்சென்ற சில நிமிட நேரத்தில் மூன்று பொம்மர்கள் கூட்டாக வந்தன அவை அனேகமாக கோட்டைப் பகுதியிலும், கஸ்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## உணவு முத்திரைக்காரருக்கு விநியோகம் உடன் நிறுத்தம்

யாழ்ப்பாணம், செப். 25

உணவு முத்திரை வைத்திருப்போருக்கு இலவச நிவாரணம் வழங்கப்படுகிறது. அதனால் உணவு முத்திரைக்குரிய உணவு விநியோகம் உடனடியாக நிறுத்தப்படும்.

யாழ் மாவட்ட உணவு விநியோகம் சம்பந்தமாக ஆராய்வதற்காக நேற்று நல்லூர் பிரதேசசபைமண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது

அரச திணைக்கள அதிகாரிகள், உதவி அரசாங்க அதிபர்கள், மற்றும் முக்கியஸ்தர்கள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். அரசாங்க அதி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கென்ட் பண்ணையில் இரண்டு சிப்பாய்கள் பலி!

### ஆயுதங்களும் மீட்கப்பட்டன

கொழும்பு, செப். 25

நேற்று முன்தினம் கென்ட் பண்ணையில் இருந்து சஜபுர பகுதிக்கு ட்ராக்டர் ஒன்றில் சென்று கொண்டிருந்த ஆயுதப் படையினர் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் இரண்டு சிப்பாய்கள் உயிரிழந்தனர்.

பாதுகாப்பு அமைச்சு நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் இந்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

இந்தத் தாக்குதல் நேற்று முன்தினம் மாலை 4.15 மணிக்கு மணல்ஆறு பகுதியில் சிலோன் தியேட்டருக்கும் முந்திரிகைக் குளத்துக்கும் இடையில் நடத்தப்பட்ட

[4 ஆம் பக்கம் பார்க்க]

## தியாகி திலீபனின் நினைவு தினம் நாளை

### எழுச்சி நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு

நாளை நடைபெறவிருக்கும் தியாகி திலீபனின் மூன்றாம் ஆண்டு நினைவை ஒட்டி யாழ். குடாநாடு எங்கும் எழுச்சி நிகழ்ச்சிகள் நடைபெறவிருக்கின்றன,

குடாநாட்டின் பல பகுதிகளிலும் நாளை உண்ணாவிரதங்களும், நினைவுக் கூட்டங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்கள் பல்வேறு வகையில் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன.

திலீபனின் சொந்த ஊரான ஊரெழுவிலும் நினைவஞ்சலிக் கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இதே சமயம் –

தியாகி திலீபன் மறைந்த மூன்றாம் ஆண்டு நாளை நிறைவுறும் போது – அவர் மறைந்த நேரமான காலை 10.48 மணிக்கு – சகல இந்துக் கோவில்கள், தேவாலயங்கள் மற்றும் பள்ளிவாசல்களில் மணி ஓசை எழுப்பப்படும் என்றும் –

அவ்வேளையில் பொதுமக்கள் தங்களுடைய பணிகளை நிறுத்திவிட்டு இரண்டு நிமிட நேரம் தியாகி திலீபனுக்கு மௌன அஞ்சலி செலுத்தும் படியும் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. (உ)

## கிழக்கு மாகாணத்தில் 13 ராணுவத்தினர் பலி!

கொழும்பு, செப். 25

நேற்றுடன் முடிவடைந்த 36 மணி நேரத்தில் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 13 இராணுவத்தினர் உயிரிழந்தனர் என்று கொழும்பு வட்டாரங்களை ஆதாரம் காட்டி இந்திய வானொலி அறிவித்தது.

விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் பொலன்

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

மிளகாய்த்தூள், மஞ்சள் மா, புளுக்கொடியல் மா, உழுந்து மா, லூசாகவும், பக்கட்டாகவும் பெற்றுக் கொள்ள அண்ணா கோப்பிக் கடை திருநெல்வேலி.
[கி-5214]

### டில்கா வாச் வேக்ஸ் [Dilka Watch Works]

வாடிக்கையாளரின் வசதிக் கமைய எமது ஸ்தாபனம் மானிப்பாய் வீதி ஆனைக் கோட்டையில் (கிராம சபைக் கருகில்) நடைபெறுகின்றது. சகல மணிக்கூடுகளும் உத்தர வாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலெக்ரோனிக் கடிகாரங் களின் பற்றறிகளும் விற்ப னைக்குண்டு. [14313]

### கோழித்தீன்

கோழித்தீன் வகைகள் கலந்து கொடுக்கப்படும். மூல தார பொருட்கள் அரைத்து கொடுக்கப்படும். எம்மிடம் கண்டல் பட்டை சில்லறை யாகவும், மொத்தமாகவும் பெற்றுக் கொள்ளலாம் சிவா மில்ஸ் அன் இன்டஸ்றீஸ், 46/1, பிறவுண் வீதி, யாழ்ப் பாணம். [14247]

### இடமாற்றம்

அரஸ் ஜவுளியகம் இல: 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம் மண்டேலா ரேடர் (புத்தக சாலை) இல, 2, பஸ்நிலையம் ஆஸ்பத்திரிவீதி யாழ்ப் பாணம் ஆகியன தற்போது இல, 256, பருத்தித்துறை வீதி, (நல்லூர் தேரடி முன் பாக) நல்லூர் யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இயங்குகின் றன என்பதை வாடிக்கையா ளர்களுக்கு அறியத்தருகின் றோம். [13938]

## 90ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**ப. வசந்தகுமார்**
(வசந்தன்)
(சைக்கிள் கடை உரிமையாளர்)

மண்ணில்:
09 — 04 — 1967
விண்ணில்;
28 — 06 — 1990
திதி: 25 — 09 — 1990

மகனே நாட்கள்
பல சென்றாலும்
மறவாத நினைவுடனே
நாம் இங்கு
வாழ்கின்றோம்
வசந்தா உன் அன்பின்
உருவமும்
சொல்லும் செயலும்
புன் சிரிப்பும்
எங்கள் இதயத்தில்
என்றும் நிலைத்து
நிற்கும்

உன் ஆத்மா சாந்தி அடைய என்றும் இறை வனைப் பிரார்த்திக் கின்றோம்.

தாய், தந்தை,
பெரியப்பா,
பெரியம்மா,
சகோதரிமார்,
சகோதரர்கள்,
மைத்துனிமார்,
மைத்துனர்,
உறவினர்கள்,
நண்பர்கள்.

எமேசன் றோட்,
4ஆம் வாய்க்கால்,
கரடிப்போக்கு.
கிளிநொச்சி. [14195]

## திலீபன் நினைவாக...

### அஞ்சலிகள்

★

காரைநகர், செப். 25
தியாகி திலீபன் நினைவாக நாளை புதன்கிழமை காரை நகர் யாழ்ற்றன் கல்லூரி திறந்த வெளியரங்கில் எழுச் சிக் கூட்டம் நடைபெறு கிறது. காலை 10 45 மணிக்கு ஆலய மணி ஓசையுடன் வைப வங்கள் ஆரம்பமாகும். மாலை 4 00 மணிக்கு பொதுக் கூட்டம் தொடங்கும். (இ)

★

சித்தன்கேணி, செப் 25
தியாகி திலீபனின் நினை வாக சித்தன்கேணி மகா கணபதிப்பிள்ளையார் ஆலய முன்றலில் இன்று செவ்வாய்க் கிழமை காலை 8. 30 மணி முதல் மாலை 3. 00 மணி வரை, உண்ணாவிரதம் நடை பெற ஏற்பாடாகியுள்ளது.
வட்டு- கிழக்கு, சங்கானை மேற்கு சிற்றூரவையினரும், பொதுமக்களும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த உண்ணாவிரத முடிவில் அஞ்ச லிக் கூட்டமும் நடைபெறும். (இ-6)

★

சுழிபுரம். செப். 25
திலீபனின் நினைவாக மூளாய்- தொல்புரம் சிற்றூ ரவைகள் இன்று 25 ஆம் திகதி மூளாய் சித்திவிநாயகர் ஆலய முன்றலில் அடையாள உண்ணாவிரதம் இருக்க ஏற் பாடாகி உள்ளது. [இ-28]

★

யாழ்ப்பாணம், செப். 25
தியாகி திலீபன் நினைவாக இன்று காலை 8 மணி முதல் மாலை 4 30 மணி வரை மானிப்பாய் சுதுமலை அம் மன் கோயில், பண்டத்தரிப்பு சந்தை, முத்திரைச் சந்தி, தெல்லிப்பளை - கும்பிளா வலை, புத்தூர் சோமஸ் கந்தா கல்லூரி, சுன்னாகம் ஐயனார் கோவிலடி, ஊரெழு அம்மன் கோவிலடி ஆகிய இடங்களில் உண்ணாவிரத நிகழ்ச்சிகள் ஏற்பாடாகி உள் ளன. (உ)

★

கொக்குவில், செப் 25
கொக்குவில் கிழக்கு புனித சின்னப்பர் ஆலய முன்றலில் தியாகி திலீபன் நினைவாக ஒரு நாள் உண்ணா விரதம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது கொட்டும் மழையிலும் ஏராளமான ஆண், பெண். சிறுவர், சிறுமியர் இதில் கலந்து கொண்டனர் [இ-69]

★

தியாகி திலீபனின் 3 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ மகாமாரி அம் பாள் ஆலய முன்றலில் கடந்த 23 ஆம் திகதி ஒரு நாள் உண்ணாவிரதம் அனுஷ்டிக் கப்பட்டது. உண்ணாவிரத முடிவில் கோண்டாவில் பிரதேச பொறுப்பாளர் திரு நபீக் தலைமையில் நினை வஞ்சலி உரைகள் நிகழ்த்தப் பட்டன. (இ-69)

★

கொழும்புத்துறை, செப். 25
தியாகி திலீபனின் 3 ஆவது ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி இறுதி நாளாகிய நாளை 26ஆம் திகதி புதன் கிழமை காலை கொழும்புத் துறை சிற்றூரவையும், இங் குள்ள பொது அமைப்பு களும் இணைந்து ஒரு நாள் அடையாள உண்ணாவிர தத்தை கொழும்புத் துறை முகச் சந்தியில் நடாத்த உள் ளன. [இ-30]

★

சாவகச்சேரி, செப். 25
தியாகி திலீபனின் மூன் றாம் ஆண்டு நினைவாக இன்று சாவகச்சேரிப் பகுதியில் அடையாள உண்ணாவிரதமும், அஞ்சலிக் கூட்டங்களும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. (இ-31)

# மலிவு விற்பனை

நியூஸ் பிரின்ட் வெட்டுத் துண்டுகள் (Off Cuts) மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு.
(35 அங்குல நீளம் 5 அங்குல அகலம்)
மொத்தமாக கொள்வனவு செய்வோர்க்கு விசேட கழிவு விலை வழங்கப்படும்.

தொடர்பு;
உதயன்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# இடமாற்றம்

யாழ்ப்பாணம் 95/2, ஸ்ரான்லி வீதியில் இயங்கி வந்த பிறிமா கால்நடை உணவு விநியோகஸ்தர்களான நோதேர்ண் ரேடர்ஸ் ஸ்தாபனம் தற்பொழுது
**43/2, மணல் தரை லேனில் இயங்குகின்றது**
என்பதனை வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம். எம்மிடம் சகல கால் நடை உணவு களையும் பிறிமா உணவு வகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

## நொதேர்ண் ரேடேர்ஸ்

[14318]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்:
1941 - 04 - 06

மறைவு:
1990 - 08 - 26

**அமரர் தங்கவேல் அவர்கள்**
(பிரபல கட்டடக் கலைஞர்)
உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்;
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

5ஆம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம். [14316]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டியும்



அமரர்
**புண்ணியமூர்த்தி - தெண்டாயுதபாணி**
(இளைப்பாறிய காரியாலய உதவியாளர், கல்வித் திணைக்களம் - யாழ்ப்பாணம்)

தோற்றம்: 07 - 03 - 1923
மறைவு: 26 - 08 - 1990

எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்ட அன்புத் தெய்வமே! தந்தையே! படுக்கை யில் வைத்துப் பார்க்கக் கூடாதென்றோ, நொடிப் பொழுதில் உம் உயிர் கவர்ந்தான் கொடிய காலன். எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய், வாழ்வின் வழி காட்டியாய் இருந்து உங்கள் உடல், பொருள், ஆவி ஈந்த உத்தமத்தை எங்ஙனம் மறப்போம் எப்போது ஆறுதல் கொள்வோம்?
தங்கள் ஆத்மா வேலவன் தாள் அடைந்து நற் பேறுபெற பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை. (14305)

## 31ஆம் நாள் நினைவு



**திரு. ம. யோசவ்**

மலர்வு : 6-11-1946
உதிர்வு : 25-8-1990

நித்திய இளைப்பாற்றியை இவருக்கு அளித்தரு ளும் ஆண்டவரே முடிவில்லாத ஒளி இவர்மேல் பிரகாசிக்கக் கடவது. சமாதானத்தில் இளைப்பாறு வாராக.
— ஆமேன்

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், சகோதரர்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்

நாரந்தனை தெற்கு.
ஊர்காவற்றுறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## உதவ வேண்டும்

ஈழத்தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு-அவர்கள் அனுபவிக்கும் இன்னல்களுக்குப் பரிகாரம் காண்பதற்கு —ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு உந்துதல் கொடுக்குமாறு ஐக்கிய நாடுகள் சபை கேட்கப்பட்டுள்ளது.

ஜெனிவாவில் இயங்கும் உலகத் திருச்சபை, ஈழத் தமிழர்கள் விடயத்தை ஐக்கிய நாடுகள் சபையின் கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கிறது.

இதே போலவே, மனித உரிமைகள் சம்பந்தமான ஐ. நா துணை ஆணைக் குழுவின் மாநாட்டில் ஈழத் தமிழர் பிரச்சினை எழுப்பப்பட்டுள்ளது ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஐ நா.அங்கீகரிக்க வேண்டும் என்றகோரிக்கை அங்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

ஈழத் தமிழர் பிரச்சினை வெறும் உள்நாட்டு விடயம் என்ற நிலையிலிருந்து, மேலெடுக்கப்பட்டு, சர்வதேச மயப்படுத்தப்பட வேண்டிய விவகாரமாகி விட்டது ஏனெனில் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றும் விதத்தில் பிரச்சினையை சுமுகமாக, பேச்சுக்கள் மூலம், தீர்த்துவைப்பதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் கடந்த 34 வருடங்களாகத் தவறிவிட்டது.

பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையைத்தீர்ப்பதற்கு விருப்பம் உள்ளவர்களாகக் காட்டிக்கொண்ட போதெல்லாம், ஸ்ரீலங்கா அரசினர் நாட்டின் ஒருமைப்பாடு என்பது ஒற்றையாட்சியே என்று கருதி, அவ்வாறே காட்டி, அதற்குள்ளேயே வட்டமிட்டனர் தமிழர்களுக்குச் சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை ஒப்புக் கொள்ள மறுத்தனர்.

1987 இல் இந்தியா தலையிட்டுச் செய்து கொண்ட ஜே. ஆர் - ராஜீவ் ஒப்பந்தம் கூட, ஒருமைப்பாடு என்பது ஒற்றையாட்சியே என்ற மாயை நிலையில் நின்று உருவாக்கப்பட்டதே.

தமிழர்கள் தங்களைத் தாங்களே ஆளக் கூடிய ஒரு சுயாட்சி அமைப்பை வழங்குவதற்குச் சிங்களத் தலைவர்களுக்கு மனம் ஒப்புவதில்லை. கடந்த காலப் பேச்சுவார்த்தைகளும், விளைவுகளும் அதனையே நேர் நிறுத்திக் காட்டுகின்றன. தன்னாட்சி, சுயநிர்ணயம் ஆகிய பதங்களைக் கேட்கவே அவர்கள் பயம் கொள்கிறார்கள்,

அதிகாரப் பரவலைக் கூட முழுமையாகச் செய்வதற்கு ஸ்ரீலங்கா அரசுகள் விரும்பவில்லை. அவ்வாறிருக்க, தன்னாட்சி சுயநிர்ணய உரிமைகளைத் தமிழர்களுக்கு வழங்க எப்படி அவர்கள் முன்வருவார்கள்? அவற்றைத் தாரைவார்ப்பு என்றல்லவா அவர்கள் கருதுகிறார்கள்.

தமிழர்களின் சுயாட்சி, சுயநிர்ணய அபிலாஷைகளுக்கும், சிங்களத் தலைமைத்துவத்தின் ஒற்றையாட்சி மாயைக்கும் இடையில்உள்ள இடைவெளியோ பல காதம்

எனவே, ஐ. நா போன்ற ஒரு சர்வதேச அமைப்பு இதில் தலையிடாமல் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பது என்பது கடினம். ஆகையால் அந்த உலகப் பொதுமன்றம், ஈழத் தமிழர்கள் சுயாட்சி, சுயநிர்ணயம் என்ற அடிப்படை அரசியல் அந்தஸ்துகளை யாவது அனுபவிக்க உதவ வேண்டும்.

## மட்டக்களப்பு தாதியருக்கு முழுச் சம்பளம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவ மனைகளில் பணிபுரியும் தாதிமார்களுக்கும் பயிற்சித் தாதிமார்களுக்கும் முழுச்சம்பளம் கடந்த ஜூன் மாதம் முதல் வழங்கப்படும்.

சுகாதார மற்றும் மகளிர் நல அமைச்சர் ரேணுகா ஹேரத், இது தொடர்பாகத் தன்னைச் சந்தித்த மட்டக்களப்பு மாவட்ட எம். பி ஜோசப் பரராஜசிங்கத்திடம் உறுதியளித்தார் (இ - எ)

### விலை வீழ்ச்சி

பச்சிலைப்பள்ளி, செப் 25

சாவகச்சேரிச் சந்தையில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் பெருமளவு வீழ்ச்சியடைந்துள்ளன. (117)

# திருமலை - கொழும்பு வீதியில் தமிழர்மீதுகெடுபிடி அதிகரிப்பு

யாழ்ப்பாணம், செப் 25

திருகோணமலை - கொழும்பு பிரயாணப் பாதையில் தமிழர்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தமிழர்கள் மீது படையினரின் கெடுபிடிகள் அதிகரித்து வருகின்றன.

பாலம் போட்டாறு 'மங்கி பிரிட்ஜ்' இராணுவ முகாமில் உள்ள படையினர் அந்த வழியால் செல்லும் பஸ்களை மறித்து "நீ முஸ்லிமா? தமிழனா?" எனக்கேட்டு; தமிழரை இறக்கிவிட்டு முஸ்லிம்களைத் தொடர்ந்து பிரயாணம் மேற்கொள்ள அனுமதிக்கின்றனராம்.

இவ்வாறு இறக்கப்படும் தமிழர்களைப் படையினர் தம்முடன் கூட்டிச்செல்வதாகவும், பின்னர், அவர்களில் ஒரு சிலர் விடுவிக்கப்பட ஏனையோர் தடுத்து வைக்கப்படுகின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

இது குறித்து திருமலைப் பிரஜைகள் குழுவிடம் முறையிட்டும், படையினர் தமது நடவடிக்கையை நிறுத்தவில்லையாம்.

இதனால் திருகோணமலையிலிருந்து கொழும்பு செல்ல தமிழர்கள் அஞ்சுகிறார்கள்

இதேசமயம் வாரத்துக்கு ஒரு தடவை இராணுவ பாதுகாப்புடன் திருகோணமலைக்கும் கொழும்புக்கும் இடையில் பஸ்சேவை நடைபெறுகிறது.

படையினர் கெடுபிடியால் இடையில் அவசர தேவைகளின் நிமித்தம் தமிழர்கள் கொழும்புக்குச் செல்ல முடியாத நிலைமை இருந்து வருகிறது. (இ - 6)

## பசுப்பால் தட்டுப்பாடு

சாவகச்சேரி, செப் 25

தவிடு பிண்ணாக்கு முதலான பொருள்களுக்கு ஏற்பட்டு வரும் தட்டுப்பாட்டால் பசுமாடுகளுக்குப் போதிய சாப்பாடில்லை இதனால் பாலுக்குப் பரவலாகத் தட்டுப்பாடு நிலவுகிறது இப்பகுதியில் ஒரு போத்தல் பால் பத்து ரூபாவரை விற்பனையாகிறதாம்.

கடைகளுக்குப் பால் கிடையாததால் பால் இல்லாத தேநீரே அதிகமாக விற்பனையாகிறது' (இ - 31)

# மூன்று மாதங்களின் பின் வவுனியாவில் ஒருசில கடைகள்

வவுனியா, செப் 25

வவுனியா நகரக் கடைகளைத் திறப்பதற்கும், நகரின் உள்ளே முன்னைய இடத்தில் சந்தை, மொத்த விற்பனை சந்தை என்பன இயங்குவதற்கும் அனுமதி வழங்கப்பட்டது. அதை அடுத்து பொது மக்களும், வியாபாரிகளும் கடந்த புதன்கிழமை வவுனியா நகர வீதிகளில் ஒரு மணி நேரம் (நண்பகல் 12 மணி முதல் ஒரு மணி வரை) நடமாடியதைக் காண முடிந்தது.

மூன்று மாத காலத்தின் பின்னர் நகரில் ஒரு சில கடைகள் திறக்கப்பட்டிருந்ததையும், பெண்கள், சந்தை வியாபாரிகள் ஆகியோர் கடை வீதிகளில் நடமாடியதையும் காண முடிந்தது.

இதனிடையில், வவுனியா-குடியிருப்பு வீதி, வவுனியா-கண்டி வீதி ஆகியவற்றின் ஊடாக நகரின் உள்ளே பிரவேசிக்கும் முக்கிய சந்திகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரும், பொலீஸாரும் உள்ளே பிரவேசித்த பொது மக்கள் மற்றும் வியாபாரிகளின் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொண்டு அனுமதி இலக்கப் பாஸ்களை வழங்கி சோதனைகளின் பின்னரே உள்ளே செல்லவிட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வவுனியா-ஹொரவப்பொத்தானை வீதியில் வழமையான சோதனை, அனுமதி பாஸ் வழங்கும் நடவடிக்கைகளும் இடம்பெற்றன.

சந்தை, மொத்த விற்பனை சந்தை என்பன சின்னப் புதுக்குளம், கோவில் புதுக் குளம், மாத்தறை பாஸ் சந்தி ஆகிய பகுதிகளில் இருந்து வவுனியா நகருக்கு மாற்றப்பட்டதை அடுத்து இப் பகுதி ள் வெறிச்சோடின.

எனினும் ஒன்றிரண்டு லொறிகளும், மாட்டுவண்டிகளும் சின்னப் புதுக்குளம் சந்திப் பகுதியில் காணப்பட்டன. (அ-164)

# மாங்குளம் திரும்புவதற்கு தயங்கிவரும் அகதிகள்

மாங்குளம், செப் 25

மாங்குளம் பகுதியிலிருந்து வெளியேறிய 300 குடும்பங்கள் தமது சொந்த வீடுகளுக்கு திரும்ப முடியாத நிலையில் இருந்து வருகின்றன.

இடையிடையே ஏற்பட்டு வரும் இராணுவ நடவடிக்கைகளே இதற்குக் காரணம் ஆகும்

இதேவேளை பனிக்கன் குளம், கிழவன் குளம் மக்கள் படிப்படியாக மீளக் குடியமர்ந்து வருகின்றனர். (இ - 94)

## ஆசிரியருக்கு பதவி உயர்வு

மூன்றாம் தர அதிபர்களாகப் பதவி வகிக்கும் இரண்டாயிரம் ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படவிருப்பதாக கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன [இ - எ]

# விடத்தல்தீவுப் பகுதியில் பொம்மர்கள் தாக்குதல்

மன்னார், செப். 25

மன்னார், விடத்தல் தீவுப் பகுதியில் அண்மையில் விமானத் தாக்குதல்கள் இடம் பெற்றன. 3 பொம்மர்களும் ஒரு ஹெலியும் இந்தத் தாக்குதல்களில் ஈடுபட்டன.

இந்தத் தாக்குதல்களின் போது பொதுமக்களில் ஒருவர் உயிரிழந்தார். அப்பகுதியைச் சேர்ந்த தையல் தொழிலாளி இருவரே உயிரிழந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது.

இப்பகுதியில் பதுங்கு குழி வசதிகள் இல்லாததால் மக்கள் பெரும் அல்லோலகல்லோலப்பட்டனர். (ஒ 6)

# அகதியாக படகில் சென்றோர் வலைப்பாடு கிராமத்தில்!

யாழ்ப்பாணம், செப். 25

யாழ்ப்பாணம், மணியம் தோட்டத்தில் இருந்து தமிழ ம் நோக்கிப் படகில் புறப்பட்ட அகதிகள் பூநகரியில் இருந்து 10 மைல்கள்தொலைவிலுள்ள வலைப்பாடு என்ற கரையோரக் கிராமத்தில் தங்கியுள்ளனர்.

இது பற்றித் தெரியவருவதாவது:-

கடந்த 12 ஆம் திகதி படகில் 45 பேர் தமிழகம் புறப்பட்டனர். புறப்பட்டுச் சென்ற சுமார் 45 நிமி நேரத்தில் படகு கடற்படையினரின் பீரங்கித் தாக்குதலுக்கு இலக்கானது படகின் இயந்திரப் பகுதி சேதமடைந்தது.

படகு தொடர்ந்து சென்றது; பூநகரிப் பக்கமாகச் சென்று, வலைப்பாடு என்ற கிராமத்தைப் படகு அடைந்தது.

அதில் பயணம் செய்த அனைவரும் அங்கு இறக்கப்பட்டனர். அங்கிருந்து ஒருவாறாக முழங்காவிலைச் சென்றடைந்தனர்.

கடந்த 10 நாட்களுக்கும் அதிகமாக அவர்கள் அங்கு தங்கியுள்ளனர். கையில் இருந்த பணத்தை செலவிட்ட நிலையில் அவர்கள் அங்கு பெரும் அல்லற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

அந்தப்படகில் சென்ற கொக்குவிலைச் சேர்ந்த ரவிராஜ் என்பவர் அங்கிருந்து ஞாயிறன்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

தமிழகம் செல்ல ஆள் ஒருவருக்கு ஆயிரத்து 800 ரூபா அறவிடப்பட்டதாக ரவிராஜ் கூறினார். (ஒ)

# விடுதலைப்புலிகள் அழிந்துவிட்டால் தமிழர் என்றுமே நிரந்தர அடிமை

## பண்ருட்டி எச்சரிக்கிறார்

சென்னை, செப். 25

இலங்கையில் இன்று நடப்பது உள்நாட்டுப் போர். முப்படைகளையும் கொண்டு சிங்கள அரசு தமிழர்களைத் தாக்கி வருகிறது. தம்மிடம் இருப்பவற்றைக் கொண்டு தமிழ் மக்கள் சார்பில் விடுதலைப்புலிகள் தான் போராடுகிறார்கள். இந்தப் போரில் விடுதலைப் புலிகள் அழிந்துவிடுவார்களேயானால் இலங்கைத் தமிழர்கள் என்றுமே நிரந்தர அடிமைகளாகி விடுவர். அல்லது தமிழர் முழுப் பேருமே தமிழ் நாட்டுக்கு அகதிகளாக ஓடி வரும் நிலைமை ஏற்படும்.

முன்னாள் அமைச்சரும், திருநாவுக்கரசு தலைமையிலான அ. தி. மு. க தலைவருமான பண்ருட்டி ராமச்சந்திரன் மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை இந்திய அரசு அங்கீகரிக்க வேண்டும். அதற்காக வட்டமேஜை மாநாட்டைக் கூட்டி இலங்கைத் தமிழர்களின் விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் வகையில் புதிய சமஷ்டி அமைப்பை உருவாக்க வேண்டும்.

எப்போது ஒப்பந்தம் போட்டாலும் அதனை மீறுவதுதான் இலங்கை அரசின் வழக்கம்;

பண்டாரநாயகா -செல்வா ஒப்பந்தம் மீறப்பட்டது. அதே போன்று சேனநாயக செல்வா ஒப்பந்தமும் மீறப்பட்டது.

இந்திய இராணுவத்தைக் [illegible] செய்து கொண்ட ஒப்பந்தத்தைச் சரியாக நிறைவேற்ற முடியவில்லை. ராணுவத்தை திருப்பியனுப்பிவிட்டு விடுதலைப் புலிகளை ஒழித்துவிட்டால் பிரச்சினை இராது என்ற போக்கில் இலங்கை அரசு செயல்படுகிறது.

இதை இந்திய அரசு புரிந்து கொண்டு இலங்கை அரசை எத்தகைய வகையில் வற்புறுத்த முடியுமோ அத்தகைய வகையில் வற்புறுத்தி ஆவன செய்ய வேண்டும்.

இலங்கையில் இனப்படுகொலை நடந்துகொண்டிருக்கிறது. இதனை மத்திய அரசிடம் கூறி தி. மு. க. அரசு தடுக்க முயற்சி செய்யவில்லை.

அயல்நாட்டு விவகாரத்தில் தலையிட முடியாது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் குஜ்ரால் கூறியிருக்கிறார். ஆனால் எந்தவொரு அரசும் ஓரிடத்தில் இனப்படுகொலை நடக்கும்போது அதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

இப்படி அவர் கூறினார். [இ]

# நிவாரணப் பொருள் விநியோகம்

கோப்பாய், செப் 25

இராணுவ நடவடிக்கை காரணமாக தொழில்வாய்ப்பு இழந்தவர்கள், இடம்பெயர்ந்தவர்கள் உணவு முத்திரை வைத்திருப்பவர்களுக்கான இலவச நிவாரணப் பொருள்கள் தற்போது நீர்வேலி, ப. நோ. கூ. சங்கத்தினால் கோப்பாய், நீர்வேலி, இருபாலை பகுதிகளில் வழங்கப்பட்டு வருகின்றன.

நிவாரண பெர்மிட்டுகளை இதுவரை பெறாதவர்கள் ப. நோ. கூ. சங்கக் கிளைகளில் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-72)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிமனைகளை தாக்குவதை நிறுத்தும்படி கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 25
''பொதுமக்கள் குடிமனைகள் மீது குண்டு வீசுவதைத் தடுத்து நிறுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.''

ஐ.நா. அபிவிருத்தித்திட்ட அதிகாரிகளுக்கு மேற்கண்ட கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

ஐ. நா. அபிவிருத்தித் திட்டம யாழ். மாவட்டத்தில் மேற்கொண்டு வரும் அபிவிருத்தி, புனரமைப்புத் திட்டங்களுக்குப் பொறுப்பான அதிகாரியான திரு. கே. சற்குணலிங்கம் அனுப்பியுள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது [இ-3]

# மரண அறிவித்தல்கள்

## பூதர் சக்கரை (சங்கரப்பிள்ளை)

திருநெல்வேலி வளாக ஒழுங்கையைச் சேர்ந்த திரு. பூ. சக்கரை அவர்கள் சாவகச்சேரி சங்கத்தானையில் 21 - 09 - 1990 அன்று காலமானார்.

அன்னார் சின்னம்மாவின் அன்புக் கணவரும், திருமதி செ. புஷ்பராணி, புலேந்திரன் (ஜேர்மனி), இலங்கேசன் (ஜேர்மனி), திருமதி இ. கருணாதேவி, புவீந்திரன் (ஜேர்மனி), திருமதி ஐ ரஞ்சனாதேவி (பர்ஹானா), சாந்தி, சுமதி ஆகியோரின் அன்புத் தந்தையும், அ. செல்வராசா (கட்டட ஒப்பந்தக்காரர்), இ க. இராஜேஸ்வரன் (கணக்குப் பதிவாளர், பிரதேச சபை மூதூர்), ஆர். ஜலீஸ் (ஆசிரியர் மகா வித்தியாலயம் தலைமன்னார்), திருமதி பு. கோமதி (ஜேர்மனி), திருமதி இ சுகந்தி (ஜேர்மனி), திருமதி பு. சுசீலா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், க. செ. தியாகராஜா (சமாதான நீதவான்), செ. குணாளன், செ குலேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் சிறிய தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 22 - 09 - 1990 அன்று பிற்பகல் 1 30 மணியளவில் சங்கத்தானை தாழையடி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம். இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்தோருக்கு நன்றி தெரிவிக்கின்றோம்.

தகவல்!
குடும்பத்தினர்.

வளாக ஒழுங்கை,
திருநெல்வேலி. [14315]

## திருமதி பெலிசிற்றஸ் இம்மானுவேல்

(சில்லாலை)

திருமதி பெலிசிற்றஸ் இம்மானுவேல் காலமானார்.

இவர் நாரந்தனை காலஞ்சென்ற பஸ்தியாம்பிள்ளை இம்மானுவேல் (இளைப்பாறிய தபாலதிபர், சிங்கப்பூர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அருட்சகோதரி ஸ்ரனிஸ்லோஸ், காலஞ்சென்ற அருட்திரு. N. ஜோசவ் அ. ம. தி., காலஞ்சென்ற திருமதி அக்னெஸ் இன்னாசித்தம்பி, திரு N. பிரான்சிஸ் (மலேசியா), காலஞ்சென்ற திரு. N. ஜேம்ஸ் (இளைப்பாறிய அதிபர், புனித சூசையப்பர் ம. வி., மாதகல்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரது பூதவுடல் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7-30 மணிக்கு சில்லாலை ''ஜெயமன்றம்'' இல்லத்திலிருந்து புனித கதிரை மாதா ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கற் திருப்பலியின் பின் சில்லாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்;
Dr. அல்போன்சஸ் அத்தனாசியார்

சில்லாலை. [14317]

## கந்தையா சண்முகராஜா

(அருணா போக்குவரத்துச் சேவை)

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த கந்தையா சண்முகராஜா அவர்கள் 24-09-1990 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தையா (ஒப்பந்தக்காரர்), திருமதி க நாகம்மா ஆகியோரின் அன்புப் புதல்வனும், ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், அருணா, கருணா, சுகுணா, ரகுணா, பூபாஜினி, திலோத்தமை ஆகியோரின் அன்புத் தந்தையும், ஞானசேகரம், குணசேகரம், விவேகானந்தன், மோகனராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், திலக்ஷன், கெலின், ஆதவன் ஆகியோரின் அன்புப் பேரனும், அமிர்தலிங்கம், பத்மநாதன், வாலாம்பிகை, இரத்தினம், யோகாம்பிகை, கமலாதேவி, பாமா ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25-09 1990) பகல் 12-00 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு இரங்கநாதன்

''ராஜேஸ்தானம்''
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி. [14323]

# தபாலதிபர்கள் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், செப் 25
யாழ் மாவட்டத்தில் உள்ள தபால் அதிபர்கள் தங்கள் தபாலகத்துக்குத் தேவையான முத்திரைகள் பற்றிய விவரம் [Stamp Indent] கொடுப்பனவுகளுக்குத் தேவையான பணத்தின் விவரம் ஆகியவற்றுடன் நாளை மறுதினம் [வியாழக்கிழமை] காலை 10 மணிக்கு மானிப்பாயில் தற்காலிகமாக இயங்கும் தபால்திணைக்கள கணக்காளர் ணிமனைக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

மாகாண தபால் அத்தியட்சகர் திரு. எஸ். எம். சேது காவலர்இவ் வேண்டுகோளை விடுத்துள்ளார். (உ)

# நான்கு தமிழர் கைது

மட்டக்களப்பு மாவட்டம் ஆயித்தமலைப் பகுதியை நேற்று சுற்றிவளைத்த இராணுவத்தினர் அங்கிருந்து நான்கு தமிழர்களைக் கைது செய்து தம்முடன் கொண்டு சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ)

## கிழக்கு----

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
னறுவ மாவட்டத்தில் வெலிக்கந்தை என்னும் இடத்தில் 9 சிப்பாய்களும், திருகோணமலை மாவட்டத்தில் 2 சிப்பாய்களும், மட்டக்களப்பில் 2 சிப்பாய்களும் கொல்லப்பட்டனர் என்று அச்செய்தியில் மேலும் கூறப்பட்டது. (உ-எ)

## பீப்பாய்---

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
தூரியார் வீதிப் பகுதியிலும் குண்டுகளைப் பொழிந்தன.

அவை சென்ற பின்னர் மீண்டும் வந்த 'அவ்ரோ' கோட்டைப் பகுதி. பிரதான வீதியில் தண்ணீர் தாங்கிப் பகுதி, கஸ்தூரியார் வீதிப் பகுதிகளில் பீப்பாய்க் குண்டுகளை வீசியது. (அ-உ-5)

## உணவு முத்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
பரின் தலைமையில் நடந்த பிரஸ்தாப கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஏனைய முக்கிய முடிவுகள் வருமாறு:-

★ இடம்பெயர்ந்தோர் நிவாரணம் வழங்குவதில் உள்ள சிக்கல்களை நீக்குவதற்காக, புதிய திட்டம் ஒன்றை அடுத்தமாதம் முதலாம் திகதியில் இருந்து அமுல் செய்ய வேண்டும்.

★ செயலகத்தில் கடமையாற்றும் சமூகசேவைப்பகுதி, ஓய்வூதியக் கிளை, கணக்குப் பிரிவு, உணவுக்கட்டுப்பாட்டுப் பிரிவு ஆகியவற்றைச் சேர்ந்த ஊழியர்களை வேலைக்குச் சமுகமளிக்கக் கோருதல்.

மற்றைய அத்தியாவசிய சேவைப் பகுதிகளில் பணிபுரியும் ஊழியர்களையும் வேலைக்கு இயன்றளவு சமுகமளிக்கக் கோருதல்.

★ திணைக்கள ஊழியர்களுக்கு சம்பளத்தைப் பணமாக வழங்க முயற்சி எடுக்க வேண்டும். (அ-3 5)

## கென்ட் பண்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
தாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன

ரி 81 ரகத் துப்பாக்கி - 1, ரி 56 ரகத் துப்பாக்கி - 1, ரவைக்கூடு - 11, ரவைகள் 105, ஹெல்மெட் - 2, ஹோல்ஸர்கள் - 2 ஆகியவையும் இத்தாக்குதலின்போது விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்டதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேசமயம் வந்தாறுமூலையில் ரோந்து சென்ற ஆயுதப் படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இரண்டு சிப்பாய்கள் காயமடைந்தனர். (உ-எ)

# முஸ்லிம் ஊர்காவல் படையை கலைக்க அரசிடம் வற்புறுத்து

கிழக்கு மாகாணத்தில் செயற்படும் முஸ்லிம் ஊர்காவல் படைகளைக் கலைத்து விடும்படி அரசாங்கத்தைத் தமிழ் அரசியல் கட்சிகள் கேட்டுள்ளன.

ஆறு தமிழ் அரசியல் கட்சிகளான ஈ.பி.ஆர் எல்.எப்., ஈ.என்.டி எல் எப்., ரெலோ, புளொட், தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கூட்டாக நேற்றுக் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இத்தகவல் வெளியிடப்பட்டது.

''பொதுமக்களைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட ஊர்காவல் படையினர் பயங்கரவாதிகளாக மாறி ஒன்றுமறியாத அப்பாவித் தமிழ்மக்களை கொன்று வருகின்றனர்''.

''முஸ்லிம் ஊர்காவல் படையினரால் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுவது குறித்து அரசு பாராமுகமாக இருந்து வருகின்றது'' என்று செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

முஸ்லிம் ஊர்காவல் படையினர் தமிழர்களைக் கொலை செய்வதை நிறுத்துவதற்கான பொது ஒழுங்கு ஒன்றை ஏற்படுத்துவதற்காக தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் முஸ்லிம் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. [அ-எ]

# பச்சை மரங்களை வெட்டி அலங்காரம் செய்யாதீர்!

## விடுதலைப் புலிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப் 25
போராளிகளின் வீரமரணங்களுக்கு அஞ்சலி செலுத்தும் போதும் தியாகிகளை நினைவு கூரும் போதும் பச்சை மரங்களைவெட்டி அலங்கரிப்பதையும், தென்னை, பனைகளை வெட்டி நாட்டுவதையும் விலக்குமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வடமராட்சிப் பிரிவு கோரியிருக்கிறது.

எமது இயக்க வீரர்கள் ஒவ்வொரு நாளும் வீரமரணங்களைத் தழுவுதல் இன்று நடைமுறையாகி விட்டது.

உயிர்மரங்களை அழிப்பதாலும், அவற்றின் உறுப்புக்களை குறைப்பதாலும் எமது மண்ணின் இயற்கை வளம் அழிக்கப்படும் அபாயம் தோன்றியுள்ளது.

இதைத் தடுப்பதற்கு மக்கள் முன்வரவேண்டும். எதிர்காலத்தில் அஞ்சலியைச் செலுத்த கொடிகள், பதாகைகள், தீட்டிய உருவங்கள் போன்றவற்றையே பயன்படுத்துமாறு கோருகிறோம்- இவ்வாறு கோரப்படுகிறது.

# யாழ். நிலைமை குறித்து பாதுகாப்புச்சபை முக்கியமுடிவு?

கொழும்பு, செப். 25
பாதுகாப்புத் துணை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தினா கடந்த ஞாயிற்றுக்கிழமை மண்டைதீவுக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமையை நேரில் பார்வையிட்டார்,

முப்படைத் தளபதிகளுடன் சென்ற துணை அமைச்சர், மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் நடத்திய மாநாட்டில் யாழ்-கோட்டை சம்பந்தமான இராணுவ நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்தார் என்றும் வடபகுதி தளபதி டென்சில் கொப்பேகடுவ தள நிலைமையை விளங்கப்படுத்தினார் என்றும் கூறப்பட்டது.

அமைச்சர் பின்னர் பலாலியிலும் மாநாடு ஒன்றை நடத்தினார்.

அமைச்சரின் யாழ். விஜயத்தைத் தொடர்ந்து யாழ்ப்பாண நிலைமையை அனுசரித்து முக்கிய முடிவுகளை மேற்கொள்வதற்காக பாதுகாப்புச்சபை நேற்றிரவு கூடி ஆராய இருந்தது (அ)

# மரண அறிவித்தல்கள்

## மூத்ததம்பி சுப்பிரமணியம்

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த மூத்ததம்பி சுப்பிரமணியம் [பொன்னுத்துரை மாஸ்ரர்] இளைப்பாறிய அதிபர் 24-09-1990 இல் காலமானார்.

இவர் இளைப்பாறிய ஆசிரியை நல்லம்மாவின் அன்புக் கணவரும், செல்வகுமாரி, செல்வவேணி, செல்வமாலினி, சுரேஸ் [ஜேர்மனி], சரவணபவன் [U.K] சுமதி ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியமோகனின் மாமனாரும், றுஜாந்த், றுஜாந்தி ஆகியோரின் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று [25-09 1990] செவ்வாய்க்கிழமை மாலை 3-00 மணியளவில் கோப்பாய் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

குமர கோட்டம்,
V C ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு,

தகவல்; நல்லம்மா [மனைவி]
[13870]

## செல்வநாயகம் யேற்றூட் [றீற்றா]

செல்வநாயகம் யேற்றூட் [றீற்றா] காலமாகிவிட்டார். இவர் செல்லர் செல்வநாயகத்தின் அன்பு மனைவியும், லீலா, மரியதாஸ், விமலதாஸ், மனோகரன், ரிபூசியஸ் ஆகியோரின் அன்புத்தாயாரும், லெயிற்றன், மலர், கலா ஆகியோரின் அன்பு மாமியாரும், லேனுஜா, எமரென்சியா, பிரசாத் ஆகியோரின் அன்புப்பேத்தியாருமாவார்

அன்னாரின் பூதவுடல் கல்வாரி, அன்னம்மாள் கோவில், மானிப்பாய் இல்லத்திலிருந்து 25 - 9 - 90 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நல்லடக்கத்திற்காக பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும், இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

28, மவுண்கார்மல் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

தகவல் :
செல்லர் செல்வநாயகம்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம். நாவலர் வீதி 229/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 25 09-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org